சென்னை சமூக நல ஆணையரகத்தின் கூட்டரங்கில் சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் தலைமையில் நேற்று (24.02.2025) நடைபெற்ற கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் மூன்றாவது கூட்டத்தில் வாரியத்தின் உறுப்பினர்கள் சுய தொழில் புரிய விண்ணப்பம் செய்தவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பயிற்சி வழங்கும் திட்டம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி என்.வி.என்.சோமு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி ஆர். லில்லி. வருவாய் நிர்வாக ஆணையர் சு.வீ.முரளீதரன், வாரியத்தின் பிற அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

சைதை கிழக்கு பகுதி

169 அ வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

வட்டப் பொறுப்பாளர் சைதை ஆ.வரதன் அறிவிப்பு !

சென்னை, பிப். 25 -

சைதை கிழக்கு 169 அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டப் பொறுப்பாளர் சைதை ஆ.வரதன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சைதை கிழக்கு பகுதி 169வது 'அ' வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில், சைதாப்பேட்டை, பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், மாவட்டச் செயலா ளருமான மா.சுப்பிரமணி யன், வழிகாட்டுதலின்படி, தலைமை செயற்குழு உறுப்பினரும், சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயருமான சைதை மு. மகேஷ்குமார், ஆலோசனைப் படியும், சைதை கிழக்கு பகுதி செயலாளரும், 13வது மண்டல குழு தலைவருமான இரா. துரைராஜ், அறிவுறுத்தலின் படி, வட்ட அவைத் தலைவர் வே.கோதண்டம் தலைமையில், நடைபெறுகிறது.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2) கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1.3.2025 அன்று கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின்

பிறந்தநாள் விழா கொண்டாடுவது சம்பந்தமாக.

இவ்வாறு வட்டப் பொறுப்பாளர் சைதை ஆ.வரதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (24.02.2025) சென்னை, சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு லைமையில் 2024– 2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் "முதல்வர் படைப்பகம்" மற்றும் பல்வேறு நூலகங்களை மேம்படுத்துவது குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர். முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அயாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார். தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, திருமதி.அங்கையர்கன்னி, கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள் மற்றும் சிஎம்டிஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாளை (பிப்.26) நடைபெறுகிறது! திருமதி துர்கா ஸ்டாலினின் கார் ஓட்டுநர் –

என்.ஆனந்த் புதல்வி ஏ.நித்யா - ஏ.ஜி.மகேஷ் மணவிழா!

கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்! இன்று மாலை மணவிழா வரவேற்பு!

சென்னை, பிப்.25-

கழக முன்னோடியும், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என்.ஆனந்தன் புதல்வி ஏ.நித்யா (எ) யோகிதா மணவிழா நாளை (பிப்.26) சென்னை - ஷெனாய் நகரில் நடைபெறுகிறது.

கழக முன்னணியினர், தோழர்கள் பலரும் மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றி விவரம் வருமாறு :

கழக முன்னோடியும், திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என்.ஆனந்தன் - திருமதி. ஏ.தேவிகா ஆகியோரின் புதல்வி ஏ.நித்யா (எ) யோகிதாவுக்கும் - சென்னை, முகப்பேர் - வி.கோபிநாத் - திருமதி. ஜி.தேவி ஆகியோரின் புதல்வர் ஏ.ஜி.மகேஷுக்கும் திருமணம் நாளை (26.2.2025 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில், சென்னை - பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை - ஷெனாய் நகர் - அய்யாவு மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

மேலும் - கழக முன்னணியினர், தோழர்கள் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

முன்னதாக, இன்று (25.2.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 7.00 மணியளவில், மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எம்.எம்.ஜெயரத்தினம் தலைமை!

மதுரவாயல் 92வது வார்டில் 'முதல்வர் மருந்தகம்'!

பி.கே.மூர்த்தி –கே.வி.திலகர் திறந்து வைத்தனர்!

சென்னை, பிப். 25-

முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக முதல்வர் மருந்தகத்தை நேற்று திறந்து வைத்தார். இதனையொட்டி சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டம் மற்றும் அம்பத்தூர் 7வது மண்டலம் 92 ஆம் வார்டில் மாவட்ட கழக செயலாளர் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினரும் எம் .ஜி.ஆர் பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வேராஜன் ஆகியோர்களின் வழிகாட்டலில் 92 வது வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் தலைமையில் 7வது மண்டலகுழு தலைவரும் தலைமை செயற்குழு உறுப்பினர் பி. கே.மூர்த்தி 92வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.வி. திலகர் ஆகியோர் முதல்வர் மருந்தகத்தை திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழில் அரசு ஆகியோர் முன்னிலையிலும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.ஜி. வேலன் டாக்டர் எம் .சி. அழகிரி ஏ.சுந்திரி, எம்.எஸ். பிரபா பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், டி.கலைநேசன் எம்.பி.நவராஜ் எம்.என்.ராஜ்கமல், எம் .ஏ.மதியழகன் எம். ஜேம்ஸ் எம்.இ.எஸ்.தமிழன் பன், எம்.சி.இளங்கோவன், எஸ்.ஆனந்தன், எம்.பி.சீனிவாசன், எம்.எஸ்.தமிழ் அழகன் பி.நவகுமார் எஸ். ஜமுனா , ஜெ.தாமோதரன், எம்.கண்ணப்பன் சி.காமராஜ், டி.ஆல்பர்ட், டி.நிக்ஸன் வி.வளர்மதி, எம். டிராஜி, வி.கலைவாணன் கே.மேகநாதன் எம்.இமயவர்மன், டி..அமுல்ராஜ், கே.தயாநிதி, வி.திரு முருகன், என்.தினேஷ், எஸ். ராகுல், எம்.கே.நரேஷ் எம். எஸ்.கார்த்திக் எஸ்.சுரேஷ், எம்.எஸ்.சந்தானம், எஸ். பாலாஜி, எம்.ஜி.சுரேஷ், எ.லீலவாதிஎழிலரசு, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன் பி.நாகராஜ் கே.முருகன் கே.பிரகாஷ், எம்.பி. நவசுந்தர்

ஜி.நாகராஜ், எம்.சி. விமல்தாஸ், வி.ஆர்.மகேந்திரன், எம்.ஜி.எம்.புகழேந்தி, எ ல் . கி ரு ஷ் ண மூ ர் த் தி , கே.பிரகாஷ், எம்.சபரிதாஸ், என்.மல்லியப்பன், எம்.ஜி.தேவன் அ.வாள் மூர்த்தி எம்.பி.எழிலரசு அ.பிரதாப் எஸ்.விஜயகுமார் எம் எம் வினோத் மற்றும் இளைஞர் அணி செயலாளர் எம். எம். ஜெ. ரோஷன்காந்த, வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம். ஜி.விக்னேஷ் எம் . சக்திவேல் எம்.எஸ்.மனிரூபன், எஸ்.நரேந்திரன் மற்றும் மாணவர் அணி அமைப்பாளர் வி. தத்தாத்ரேயா, மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ். நவின்குமார் எம்.நவின்குமார் எஸ்.சபரி சுரேஷ், மகளிர் அணி சேர்ந்த சிவசக்தி பிரியா, யு.காயத்திரி, எஸ். அர்ச்சனா வைதேகி,ஜி.மரகதம், நதியா, உள்ளிட்ட மகளிர் அணி சேர்ந்த சகோதரிகள் கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் நிறைவில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினோம்

ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா – க.தனசேகரன் – கே.கண்ணன் பங்கேற்பு!

கலைஞர் நகர் 137 -வது வட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

வட்டச் செயலாளர் பி.கே. குமார் அறிக்கை!

சென்னை, பிப்.25-

சென்னை தெற்கு மாவட்டம் - கலைஞர் நகர் தெற்குப் பகுதி - 137வது வட்டச் செயற்குழுக் கூட்டம் குறித்து வட்டச் செயலாளர் பி.கே.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவரின் 71-வது பிறந்தநாளை முன்னிட்டு, 137-வது வட்ட செயற்குழு கூட்டம் இன்று (25.02.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில், அவைத்தலைவர் ஆர். செல்லையா தலைமையில், வட்ட கழக அலுவலகம், ராஜீவ் காந்தி நகர், நெசப்பாக்கம், சென்னை என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இதில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, கணக்கு நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர். இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் பி. கே.குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை மேற்கு மாவட்டம்

சேப்பாக்கம் பகுதி 114வது வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

வட்ட செயலாளர் கே. கோபி அறிக்கை.

சென்னை,பிப்.25-

சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114 வட்டத்தில் 25.02.2025 மாலை ஆறு மணி அளவில் மேயர் சிட்டிபாபு தெருவில் உள்ள வட்ட கழக அலுவலகத்தில் வட்ட நிர்வாகிகள் கூட்டம் 114 வது வட்ட அவைத் தலைவர் எஸ். தனஞ்செழியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வட்ட கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி வட்ட செயலாளர் கே கோபி அறிக்கை விடுத்துள்ளார்.

பொருள்:

மார்ச் 1 கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா.

கழக ஆக்க பணிகள்.

பரங்கிமலை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அனைத்துப் பகுதிகளிலும்

கழகக் கொடி ஏற்றி 5000 பேருக்கு உணவு - விளையாட்டுப் போட்டிகள்!

ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

ஆலந்தூர், பிப்.25

பரங்கிமலை வடக்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மூவரசம்பட்டியில் உள்ள சமுதாயக் கூடத்தில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் எம். சக்தி தலைமை வகித்தார். துணைச் செயலாளர்கள்,கே செல்வராஜ், ஆர். ராஜா, மஞ்சு ஜெயபால், பொருளாளர் விநாயகமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய மாணவரணிஅமைப்பாளர் ஜி,கே வி பிரபாகரன் வரவேற்றார்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஜி.கே விவேகானந்தன் பேசும் போது நமது முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை ஒன்றியத்துக்கு உட்பட்ட ஒவ்வொரு கிளையில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கல்வெட்டுகளைத் அமைத்து தி.மு.க. கொடி ஏற்றி இனிப்பு வழங்கி தலா 1000 பேருக்கு வேட்டி, சேலை, பிரியாணி மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும். அதேபோல் ஆங்காங்க விளையாட்டு போட்டி நடத்தி பரிசுகளை வழங்க வேண்டும். இதில் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பி. பிரசாத், மாவட்ட பிரதிநிதி, புருஷோத்தமன் இளங்கோவன் மணல் செல்வம், மூவரசன் பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம் பி பிரகாஷ் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் பிறந்தநாள் விழா !

38வது வட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, அறிக்கை!

சென்னை பிப்.25

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்ட கழக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, ஆர். கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபிநேசர் எம்.எல்.ஏ, பகுதி கழகச் செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் அறிவுறுத்தலின்படி வட்ட கழக அவைத் தலைவர் கே.எஸ். ராஜா தலைமையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2025 செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணியளவில் துர்கா தேவி நகர் 6வது பிரதான சாலையில் உள்ள 38வது வட்ட மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு 38வது வட்டத்திற்கு உட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், மன்ற நிர்வாகிகள் ஆகியோர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச்செயலாளரும் மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், பிப். 25

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம் நாளை (26.2.2025 புதன்கிழமை) மாலை 3 மணி அளவில் சுங்குவார்சத்திரத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஜே.சிவபாதம் தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு ஒன்றியத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும் மற்றும் பொதுக் கூட்டம் நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. எனவே இக்கூட்டத்தில் ஒன்றிய, மாவட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி முன்னோடிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி கருங்குழி பேரூர் பாக முகவர்கள் பாக நிலை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கருங்குழி பேரூர் செயலாளர் ஆ. சுந்தரமூர்த்தி தலைமையில் டி.ஆர்.ஆர். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. பாராளுமன்ற உறுப்பினர் க.செல்வம் எம் பி மதுராந்தகம் தொகுதி பொறுப்பாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எச். சத்யசாய் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இதில் கருங்குழி பேரூர் நிர்வாகிகள் கருங்குழி பேரூர் அவைத்தலைவர் சீனிவாசன் மாவட்ட பிரதிநிதி ஜெ.திருக்காமு மற்றும் சங்கர் , கருங்குழி பேரூர் துணைச்செயலாளர் டி.,ஜி.எஸ்.தசரதன், வி.பார்த்திபன் ,நர்மதா முரளி மற்றும் பேரூர் கழக பொருளாளர் எஸ்.செந்தில்குமார் மாவட்ட நிர்வாகிகள் பேரூர் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள், பாக நிலை குழு உறுப்பினர் கழக செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் அடுத்த வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே ரமேஷ்ராஜ் முன்னிலையில் அ.தி.மு.க. மீஞ்சூர் ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் தர்மேந்திரன் அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் முருகன் மற்றும் நந்தியம்பாக்கம் ஊராட்சி ராஜீவ் காந்தி நகர் பகுதியிலிருந்து மாற்று கட்சி நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து கொண்டார்கள். உடன் மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் சி.எச்.சேகர், முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன், நந்தியம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலாவதி மற்றும் கழகத்தினர்கள் உடன் இருந்தனர்

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் பம்மல் எஸ்.எஸ்.மஹால் மண்டபத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் ,தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே. கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் பகுதி பொருளாளர் ஆர். உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு. மனோகரன்,ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது அதனை தொடர்ந்து மார்ச்28ல் தமிழ்நாடு முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் மற்றும் கழக வளர்ச்சி பணி குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், பி.கே.ஏ.சத்தியபிரபு,வட்ட செயலாளர்கள் ஏ.அனிஸ்டன்,வி.எஸ்.ஜெகநாதன்,மு.இன்பசேகர்,என்.காந்தி,எச்.முகமது அப்பாஸ்,மா. சுகுமாரன்,ப.ஸ்ரீதர் மாமன்ற உறுப்பினர்கள் ஆ.மதினாபேகம்,கல்யாணி டில்லி,ரம்யா சத்தியபிரபு,சத்யா மதியழகன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றிய துணை செயலாளர் முன்னாள் வெங்கல் ஊராட்சி மன்ற தலைவர் வி. நாகலிங்கம் படம் திறப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு திருவுருவப்படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே ரமேஷ் ராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் தங்கமுரளி திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக துணைச் செயலாளர் வி.ஜெ.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார், நிர்வாகிகள் பி.ஜி.முனுசாமி, பாஸ்கர், சீனிவாசன், மா.சும்பிரமணி, எம்.எல். டேவிட், அண்ணாமலை, ரகுபதி, ஜெகதீஷ், சுரேஷ், நாராயண சாமி, வழக்கறிஞர் ஆர்.மணிகண்டன், விஜி, எம். ரஜினி, செல்வம், மணி, நாராயண, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்